பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளித்தல் பணிகளை விவசாயிகள் எளிதில் மேற்கொள்ள

# ட்ரோன் கருவிகள் மானியத்தில் அளிக்கப்படும்!

## வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, செப்.21-

பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிக்க ட்ரோன் கருவிகள் மானியத்தில் அளிக்கப்படும் என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

விவசாயத்தில் நிலவும் வேலையாட்கள் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யவும் விவசாயிகள் காலத்தே சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு பயிர் உற்பத்தித் திறனை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தில் நடப்பாண்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும், தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்தல் முதலான பணிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு, தற்பொழுது இரண்டாம் கட்டத்திற்காக 70 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளித்தல், பூச்சி, நோய் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ட்ரோன் போன்ற நவீன வேளாண் கருவிகளும் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு 2023-24ஆம் நிதி ஆண்டில், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டத்தில், ட்ரோன்கள் வாங்க விரும்பும் சிறு, குறு, ஆதி திராவிடர், பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய் மற்றும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம் அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக நான்கு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், ஆதி திராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீதம் மானியம் மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

விவசாயக் குழுக்கள், கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் மூலம் மானியத்தில் அமைக்கப்படும் வட்டார மற்றும் கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களில் தேவைப்படுகின்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுடன் சேர்த்து ட்ரோன் கருவிகளையும் மானியத்தில் பெறலாம்.

மேலும், ஏற்கனவே அரசின் மானியத்தில் கிராமப்புற இளைஞர்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளால் அமைக்கப்பட்ட வேளாண் இயந்திர வாடகை மையங்களில் கூடுதலாக ட்ரோன் வாங்க 40 சதவீதம் அல்லது நான்கு இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

ட்ரோன்களைக் கொண்டு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்க அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்ட வேளாண் இயந்திர வாடகை மையங்கள்/ உயர் தொழில்நுட்ப வாடகை மையங்களில் ட்ரோன்களை வாங்கிட விரும்பும் வேளாண் பட்டதாரிகளுக்கு ட்ரோன்களின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது ஐந்து இலட்சம் ரூபாய் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

ட்ரோனை மானியத்தில் பெறும் விவசாயிகள் அதனை இயக்குவதற்கான பயிற்சியினைப் பெற்று அதற்கான உரிமத்தினையும் பெற்று ட்ரோனை இயக்கலாம் அல்லது ஏற்கனவே பயிற்சி பெற்று உரிமம் பெற்ற இளைஞர்கள் மூலம் இயக்கலாம். ட்ரோனை வாங்க வங்கிக் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேளாண் உட்கட்டமைப்பு நிதியிலிருந்து மூன்று சதவிகித வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இரண்டு ட்ரோன் நிறுவனங்களின் இரண்டு மாடல்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் விருப்பமுள்ளவற்றை விவசாயிகள் தேர்வு செய்துகொள்ளலாம்.

ட்ரோன் கருவி வாங்க விருப்பமுள்ள விவசாயிகள் https://mts.aed.tn.gov.in/evaadagai/ என்ற இணைய தளம் மூலம் பதிவு செய்து, உரிய வழிமுறைகளின்படி மானியத்தில் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை, கிண்டி, சிட்கோ வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (20.09.2023) முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன தொழிற்பேட்டைகளில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ்.மதுமதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குரோம்பேட்டை இராதாநகர் ரயில்வே சுரங்கப்பாதை!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பணிகளை ஆய்வு செய்தார்!

பல்லவபுரம், செப். 21 -

குரோம்பேட்டை L.C 27 இராதா நகர் இரயில்வே சுரங்கப்பாதை பணிகளை இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். இதில் மண்டலக் குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, நெடுஞ்சாலை, இராயில்வே, மின் வாரியம், துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

இது குறித்து அறிக்கை வருமாறு:

குரோம்பேட்டை, ராதா நகர் ரயில்வே கேட் (L.C.27) அமைந்துள்ள பகுதியை, தினசரி 2லட்சத்திற்கும் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு முறையும் ரயில்வே கேட்டை மூடும் போது, ஜி.எஸ்.டி., சாலை மற்றும் ராதா நகர் சாலையில், வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன.

இதனால், இரயில்வே கேட் பகுதியில், இலகு ரக வாகன சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டது. 2010ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் சுரங்கப்பால பணிகள் துவக்கப்பட்டன. ரயில்வே பகுதியில் பணிகள் முடிந்த நிலையில், நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 10ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்டன.

2019, ஜூன் மாதத்தில், சுரங்கப்பாதை திட்டத்திற்கான பணிகளை துவக்க 15.47 கோடி ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை பணிகள் துவங்கின.

தண்டவாளத்தின் கிழக்கு பகுதியில் பெரும்பாலான பணிகள் முடிந்த நிலையில், மேற்கு பகுதியில் பணிகளை துவக்க, 2022 ஜூன் மாதம் தடையில்லா சான்று கிடைத்ததை அடுத்து, மேற்கு பகுதியில் பணிகள் துவங்கின.

தற்போது, மேற்கு பகுதியான ஜி.எஸ்.டி., சாலையை ஒட்டி, பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. இந்த நிலையில், சாலை வழியாக வரும் பொதுமக்கள், நேரிடையாக பிளாட்பாரத்திற்கு செல்ல வசதியாக, சுரங்கப்பாதையின் மேற்பகுதியில் பாதை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இதன் வழியாக, ஒன்றாவது பிளாட்பாரத்திற்கு நேரிடையாக சென்று, ரயிலில் ஏறி பயணம் செய்யலாம்.

தற்போது நடைபெற்று வரும் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், இராயில்வேத்துறை அதிகாரிகள், மின்வாரித்துறை அதிகாரிகள், மண்டலத்தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோருடன் நேரில் சென்று பணிகளை ஆய்வு செய்து இந்த வருடம் டிசம்பர் மாதத்துக்குள் பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரவேண்டும் என்று அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

எண்ணூர் - கத்திவாக்கம் அரசு வணிக வளாகத்தில்

# தந்தை பெரியார் பிறந்த நாள் விழா! நல உதவிகள்!

## கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. புகழஞ்சலி!

சென்னை, செப். 21-

திருவொற்றியூரில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா. மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் அரசு வணிக வளாகத்தில் அமைந்துள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாநில மீனவர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தி சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், முன்னாள் பகுதி துணை செயலாளர் இ.ரமேஷ், 2வது வட்ட மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ் குமார், 14வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், வட்ட கழக செயலாளர் ஆர்.சந்தர், மாவட்ட பிரதிநிதி கே.கார்த்திகேயன் கே.சந்தோஷ் குமார் இ.வி. கருணாநிதி முன்னாள் நகர செயலாளர் ஏ.பாண்டியன், வி.கே.ஏழுமலை, வர்த்தக அணி மாவட்ட துணை தலைவர் பிரட் சுரேஷ்,

சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் பால உமாபதி, தலைமை கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபி, பகுதி பிரதிநிதி பி.ரமேஷ், பகுதி மீனவர் அணி எஸ். செல்வம், ஆர்.பிரகாஷ், எம்.எல்.வேலன் என்.சக்கரவர்த்தி, அல்லி முத்து, மாணவரணி ஆர்.பாலச்சந்தர், எஸ்.முகுந்த குமார், பரணி குமார், கே.முனுசாமி ஜே. ஆர்.டி.சேகர், இப்ராஹிம், லோகநாதன், சண்முகம், தயாநிதி, எஸ். விஜயராகவன், தரணி, உலகநாதன், கஜா, சரவணன், பாலா, புகழ், முருகன், பி.வி.விஜி, ரவீந்திரவர்மன், சிவகுமார், எம்.இளங்கோவன், சிவப்பிரகாசம், அஜித், சிவகுமார், கார்த்தி, அருண், ரமேஷ், வி.ஆல்பர்ட், பிரகாஷ், கோபால், குப்புசாமி, கனகராஜ், கொள்கை மணி, ராஜா, நீலகண்டன், விமல் தினேஷ், ஆர்.சுரேஷ் முருகன், மாரியப்பன், கார்த்திக், மணலி குமார், விசிக. கவி அமுதன், தாமோதரன், தி.க.மோகன், காளியப்பன், பலராமன், கோ.ராமச்சந்திரன் லட்சுமணன் திராவிட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

ரமணி மாதவன் எம்.சி. தலைமையில் - நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலையில்

# மதுரவாயல் வடக்கு பகுதி 147 வது வார்டில் புதிய மின்மாற்றிகள்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

சென்னை, செப். 21

மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டத்தில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர், 11 வது மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் 147 வது வார்டு முழுவதும் மின் வாரியத்தின் மூலம் புதியதாக ஆர்.எம்.யு மற்றும் மின் மாற்றி ஆகியவற்றை இன்று (21.9.2023 வியாழக் கிழமை) காலை 9 மணிக்கு, அஷ்டலட்சுமி நகர், 14 வது தெருவில் தொடங்கி, 147 வது வட்டம் முழுவதும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், காரம்பாக்கம் க.கணபதி தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், 147 வது வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு மாநிலம் தழுவிய பேச்சுப்போட்டி திருவள்ளூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி சார்பாக நடத்திட அழைப்பிதழ் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏயிடம் காண்பித்து அதற்கான பணிகளை மேற்கொண்டார்கள் அருகில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் நிர்மல்ராஜ் , வ.ஹரி, இயேசு பாலன் உள்ளனர்.

# 1927 முதல் செயல்பட்ட - பழைய நாடாளுமன்றக் கட்டிடம்!

புதுடெல்லி, செப். 21-

1927 முதல் செயல்பட்ட பழைய நாடாளுமன்றக் கட்டிடம் 1921 ஆம் ஆண்டில் கன்னாட் பிரபு இளவரசர் ஆர்தரால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதை தொடர்ந்து கட்டிட பணிகள் நடந்து 1927 ஜனவரி 18ல் திறக்கப்பட்டது. 1927ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதி நடைபெற்ற மூன்றாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் வைஸ்ராய் லார்ட் இர்வின், ‘டெல்லியில் உள்ள உங்கள் புதிய மற்றும் நிரந்தர இல்லத்தில் இன்று நீங்கள் முதன் முறையாகச் சந்திக்கிறீர்கள்’ என்று கூறினார்.

பண்டிட் மதன் மோகன் மாளவியா, முஹம்மது அலி ஜின்னா, பண்டிட் மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், சி எஸ் ரங்கா ஐயர், மாதியோ ஸ்ரீஹரி அனே, வித்தல்பாய் படேல் உள்ளிட்டோர் மூன்றாவது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர்.

சுதந்திரத்தை முன்னிட்டு, அரசியல் நிர்ணய சபை ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் தலைமையில் இரவு 11 மணிக்கு கூடியது. சிறப்பு அமர்வின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த உறுப்பினர் சுசேதா கிரிப்லானி, வந்தே மாதரத்தின் முதல் வசனத்தைப் பாடினார். பிரதமர் நேரு தனது புகழ் பெற்ற ‘டிரிஸ்ட் வித் டெஸ்டினி’ உரையை நிகழ்த்தினார். 1948ல் பிப்ரவரி 2 அன்று மக்களவைக் கூட்டத்தில் மகாத்மா காந்தியின் மரணத்தை சபாநாயகர் ஜி வி மவ்லாங்கர் அறிவித்தார்.

1965ல் இந்தியாவில் உணவுப் பஞ்சம் நிலவிய போது பாகிஸ்தானுக்கு எதிராகப் போரிட்ட போது, ஒவ்வொரு வாரமும் ஒரு வேளை உணவைத் தவிர்க்க வேண்டும் என்று பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி நாட்டுக்கு வேண்டுகோள் விடுத்ததும் இதே சபையில் இருந்து தான். 1975ம் ஆண்டு அவசரகாலச் சட்டத்திற்குப் பிறகு மக்களவை கூடிய போது, சபையில் பிரச்சினைகளை எழுப்ப தனிப்பட்ட உறுப்பினர்களின் உரிமைகளை ரத்து செய்த அரசின் நடவடிக்கைக்கு எதிராக பல உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மக்களவை 1975 ஜூலை 21 அன்று கூடிய போது ஜனாதிபதியின் அவசரநிலைப் பிரகடனத்தை உள்துறை துணை அமைச்சர் எப்.எச்.மொஹ்சின் வெளியிட்டார்.

அப்போது மக்களவை உறுப்பினர்களான சோம்நாத் சாட்டர்ஜி, இந்திரஜித் குப்தா, ஜகன்னாத் ராவ் ஜோஷி, எச்என் முகர்ஜி, பிகே டியோ ஆகியோர் தங்களது உரிமைகள் பறிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். 1989ல் கூட்டணி அரசு பதவிக்காலம் தொடங்கியது. 1998ஆம் ஆண்டு வரை இதனால் அடிக்கடி அரசுகள் மாறின. 1999 ஏப்ரல் 17ல் மக்களவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த வாஜ்பாய் அரசு ஒரு வருடத்திற்குள் நடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு, பிரதமர் இந்திரா காந்தி ஜூலை 22 அன்று பாராளுமன்றத்தில் பொக்ரானில் நடந்த அணுகுண்டு சோதனை குறித்து ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டார். ஏறக்குறைய 24 ஆண்டுகளுக்குப் பிறகு 1998ல், பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மே 11 மற்றும் மே 13 ஆகிய தேதிகளில் விஞ்ஞானிகள் நடத்திய அணுசக்தி சோதனைகளை அறிவித்து இந்தியாவை அணு ஆயுத நாடாக அறிவித்தார். 2008ல், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து இடதுசாரிக் கட்சிகள் ஆதரவை வாபஸ் பெற்றதையடுத்து, நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, பிரதமர் மன்மோகன் சிங் தனது கூட்டணி அரசை வலுப்படுத்தினார்.

இவ்வாறு 1927 முதல் இந்தியாவின் சாட்சியாக பழைய நாடாளுமன்ற திகழ்கிறது.

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு

# கவிஞர் தமிழ்ஒளி படைப்புலகம் கருத்தரங்கம்!

## அமைச்சர் க.பொன்முடி விழாப் பேருரையாற்றுகிறார்!

சென்னை, செப். 21-

கவிஞர் தமிழ்ஒளி பிறந்த நூற்றாண்டு செப்டம்பர் 21, 2023 தொடங்குகிறது.

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு “கவிஞர் தமிழ் ஒளி படைப்புலகம்” எனும் பொருண்மையில் நடைபெறும் இரண்டு நாள் கருத்தரங்கின் நிறைவும், கவிஞர் தமிழ்ஒளி பிறந்த நூற்றாண்டு விழாத் தொடக்கமும் சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம், பவள விழா அரங்கில் இன்று (21.9.2023), வியாழக் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையும், கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு விழாக் குழுவும் இணைந்து நடத்தும் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி பங்கேற்று விழாப் பேருரை ஆற்றுகின்றார்.

கடலூர் மாவட்டம்

# பண்ருட்டியில் ரூ.100 கோடி மதிப்பிலான சொத்து மீட்பு!

## அறநிலையத்துறை நடவடிக்கை!

சென்னை, செப். 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று முன்தினம் (19.09.2023) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர், வடகைலாசம், குருலட்சுமி அம்மாள் அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு அறக்கட்டளை வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர், வடகைலாசம், குருலட்சுமி அம்மாள் அறக்கட்டளைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் 80 சென்ட் வணிக மனை மற்றும் கட்டிடங்கள் பல்வேறு நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆக்கிரமிப்பை அகற்றிட மண்டல இணை ஆணையர் நீதிமன்ற உத்தரவின்படியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும், கடலூர் மண்டல இணை ஆணையர் ஜெ.பரணிதரன் தலைமையில் கடலூர் உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) ஆர். முத்துராமன் முன்னிலையில் வருவாய்துறை காவல் துறை மற்றும் மின்சாரத் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அறக்கட்டளை வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட வணிக மனைகள் மற்றும் கட்டிடங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும்.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 110 வது வார்டில் அமைந்துள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ,திட்டம் 2 கீழ் தேசிய ஊட்டச்சத்து மாத விழா முன்னிட்டு வளர் இளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து தோட்டம் போட்டி நடத்தப்பட்டு பங்கு பெற்ற அனைத்து பள்ளி மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு ஊக்கத் தொகையை சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு எம்.சி., பங்கேற்று வழங்கினார். இதில் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மாவட்ட நிர்வாகி து. விக்டர், எம்.டி.ஆர். நாதன், வட்டச் செயலாளர் தினேஷ் பிரபு, மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், அசோக் குமார், டி.எஸ். ராஜா, லதா பிளாரன்ஸ், பச்சையம்மாள், மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், மேற்பார்வையாளர், அங்கன்வாடி பணியாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.